CC 253/2017

23.10.2024.

அ.சா.1

பெயர்: பாஞ்சாலி

க/பெ. கருப்புசாமி

அ.சா.1 கு.ப.ம.எண். 4554/2023-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய விபரத்தைத்தான் போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். நான் கோடங்கிபட்டியில் 40 ஆண்டுகளாக வசித்துவருகிறேன். எனது வீட்டிற்கு முன்புதான் செல்வகுமார் வீடு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீடும் எதிரியின் வீடும் கிழக்குப் பார்த்த வாசப்படி என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு வடபுறம் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு ஒட்டி பின்னால் இடம் உள்ளது என்றால் சரிதான்-

மேற்படி காலி இடத்திற்குச் செல்லவேண்டும் என்றால் எங்கள் வீட்டிற்கு முன்புறமும் செல்வகுமார் வீட்டிற்கு பின்புறமும் உள்ள காலி இடத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். எங்கள் வீட்டு வாசலை ஒட்டி செல்வகுமார் வீட்டிற்கு பின்புறம் மட்டைகள் அடுக்கிவைத்திருக்கிறோம் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்னால் வடபுறம் தான் கழிவறை கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி கழிவறை கட்டியது சம்பவத்திற்கு முந்தைய நாள் என்றால் சரிதான். என் கணவர் மரம் ஏறும் வேலைக்குச் சென்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். என் கணவர் மரம் ஏறும்போது கையில் அடிபட்டு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. சிமெண்ட் சீட் போட்டு கழிவறை கட்டும்போது நானும் என் கணவரும் கட்டினோம் என்றால் சரிதான்.

கழிவறை செல்வகுமார் வீட்டிற்கு பின்னால் கட்டச்சொன்னார் என்றால் சரியல்ல. செல்வகுமாரின் அம்மா மீது புகார்அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள். நான் பொள்ளாச்சியில் இருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். கோவை அரசு மருத்துவமனைக்கு போலிசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

சம்பவத்திற்கு பின்னிட்டு 5 நாட்கள் கழித்து நான் காவல்நிலையம் சென்று நான் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு வந்தவர்களில் ஒருவர் நான் சொல்லச் சொல்ல புகாரினை எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார். என் கணவரை செல்வகுமார் அடித்த கம்பியை நான் போலிசாருக்கு எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். கம்பியை போலிசார் மறுநாள் என்னை விசாரிக்கும்போது எடுத்துவந்தார்கள்.

ஆஜர் எதிரி செல்வகுமார் சம்பவத்திற்கு பின்னிட்டு திருப்பூரில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். தற்போது எங்கள் வீட்டிற்கு பின்புறமாக கழிவறை கட்டியுள்ளோம் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் செல்வகுமார் இரும்பு ராடால் என் கணவரை அடிக்கவில்லை என்றால் அடித்தது உண்மைதான்.

நான்தான் என் கணவருடம் அலைந்தேன். சிமெண்ட் சீட்டில் விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ சமயத்திலேயே போலிசார் வந்து பார்த்து கேஸ் எழுதிக்கொண்டார்கள். எனக்கும் எதிரிக்கும் முன்பகை இருந்தது என்றால் சரியல்ல. நான் எதிரியின் அம்மாவை அடித்தால் அவர் வழக்கு கொடுத்துவிடுவார் என்று பயந்து மேற்படி புகாரினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.